# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1870/3 - 2014 ජූලි 07 වැනි සඳුදා - 2014.07.07

*1870/3 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

இறப்பர் வளர்த்தல், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க இறப்பர் வளர்த்தல், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதனகத்தேயுள்ள அட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான சபையின் அத்தகைய தீர்மானங்களை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபணைகள் 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் நாளன்று நண்பகல் 12.00 மணிவரை சபையின் தவிசாளரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபணை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபணை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகிறதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

**டபிள்யூ. ஜே. எல். யூ. விஜயவீர,**
தவிசாளர்,
இறப்பர் வளர்த்தல், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழிற் திணைக்களம்,
கொழும்பு 05
2014.07.04.

**அட்டவணை**

இறப்பர் வளர்த்தல், உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1945 யூலை மாதம் 31 ஆந் திகதிய 9441 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானியில் வெளியிடப்பட்ட அறிவிப்புக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளவையும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2006 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் திகதிய 1469/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்மானியில் வெளியிடப்பட்ட


*இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk.*எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அறிவிப்பினால் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தில், ஏற்கனவேயுள்ள பாகத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பாகத்தை இடுவதன் மூலம், மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும்.

**II ஆம் பாகம்**

நாளாந்த நேர வேலைக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்

| | |
|---|---|
| வேலையாள் | - ரூபா 405.00 |

*07-624*